காலத்தில் எந்தவிதத் திட்டமும் நிறுவுவது முடியாத காரியமெனவும் வனத்துறை கருத்து தெரிவித்துள்ளது. எனவே, முண்டந்துறை வனவிலங்கு சரணாலயமுள்ள இடத்தில் எந்த விதமான ஆய்வுப் பணியும் மேற் கொள்ளக் கூடாதெனவும் மேற்படி இடத்தில் நிறுவக் கருதியுள்ள மேல் தாமிரபரணித் திட்டத்தை மீண்டும் பரிசீலிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 164: 165, 166, 167 ஆகியவை மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர்.

வினா எண். 168—திரு இல. பலராமன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூர் கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிலகம் தனியாருக்கு வாடைகைக்கு விடப்பட்டதா?

(ஆ) எந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டது?

(இ) இதன் வருடாந்திர வாடகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகள் எழவில்லை.

திருப்பூரில் சப் கோர்ட் அமைத்தல்.

வினா எண் 169— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூர் நகரில் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திருப்பூர் நகரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1981 பிப்ரவரி 4]

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள் அது நீண்டகாலமாக அந்த நகரத்திலே இருந்து வருகிற ஒரு முக்கியமான பிரச்னையாகும். கிட்டத்தட்ட 30 ஆண்டுக் காலமாகக் அந்தக் கோரிக்கை அரசினுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தும் அது சரியாகக் கவனிக்கப்படாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. கடந்த ஆண்டு முதல்வர் அவர்களைச் சந்தித்த வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அந்த வினாவைத் தொடுத்த பொழுது, அவர்கள் ஒப்புதல் அளித்து, பரிசிலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மிக விரைவாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வழக்கறிஞர் சங்கமும், மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்களும் இது குறித்து கொடுத்த கோரிக்கையை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்தது. உயர்நீதிமன்றம் இதுகுறித்து பரிந்துரை செய்தது. விரைவிலே இதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் இதற்கு மறுதலித்ததாக ஒரு வதந்தி இருக்கிறது. அப்படி உயர்நீதிமன்றம் அதை ஒப்புக் கொள்ளவில்லையா என்கிற ஒரு நிலை அங்கே இருக்கிற காரணத்தால், அதனுடைய உண்மை நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் தற்பொழுது இயங்கி வருகின்ற சார்பு நீதிமன்றங்களில் ஏதேனும் ஒன்றைத் திருப்பூருக்கு மாற்றலாமா என்ற ஆலோசனையைக் கேட்ட பொழுது அதற்குத்தான் உயர்நீதிமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. தனியாக திருப்பூரிலே ஒரு சார்புமன்றம் அமைப்பது குறித்து உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது.

திரு. எம். சின்னராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உடுமலைப்பேட்டையில் நிறுவப்பட் சார்பு நீதிமன்றம், ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி திருப்பூருக்குக் கோர்ட்டு வேண்டுமென்பதைப் பற்றி, நீங்கள் வழக்கறிஞர் என்பதால் கேள்வி கேட்க அனுமதிக்கிறேன். ஆகவே, அதுபற்றி கேளுங்கள்.

திரு. எம். சின்னராஜ் : அதுதான். ஏற்கனவே உடுமலைப் பேட்டையில் அந்த நீதிமன்றம் செயல்படுவதற்குரிய வழக்குகள் இல்லையென்ற நிலை இருந்து வருகிறது. ஆகவே, அதே நிலை திருப்பூரில் ஒரு சார்பு நீதிமன்றம் ஏற்படும்போதும் ஏற்படும் அல்லவா என்பதையும் அது குறித்த ஆட்சேபணையைக் கோவை மாவட்ட வழக்கறிஞர் மன்றம் தெரிவித்திருக்கிறதா என்பதையும் அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் இல்லையென்ற காரணத்திற்காக உடுமலைப் பேட்டையிலிருந்து சார்பு நீதிமன்றத்தை மாற்றுவோமானால், அங்கேயிருந்தும் வழக்கறிஞர்கள் சங்கங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கும். திருப்பூருக்குத் தனியாக ஒரு சார்புமன்றம் தேவை. கோவை மாவட்டம் பெரிய நகரமாக இருக்கிறது. அங்கு பல்வேறு வழக்குகள் அதிகமாக இருக்கின்றன. அங்கு தேவை என்பதை அரசும் உணர்ந்திருக்கிறது. உயர் நீதிமன்றமும் உணர்ந்திருக்கிறது. தனியாக அங்கு சார்பு மன்றம் நிறுவ விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள பினாமி கடன்கள்.

வினா எண். 170— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவு – சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள எல்லா கூட்டுறவு சங்கங்களிலும் 'பினாமி' கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டு பிடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பினாமிக் கடன்களைக் கண்டுபிடிக்கக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. வாணிபப் பயிர் கடன்கள் சரிவர பயன்படுத்தப் பட்டனவா என்பதை சங்கச் செயலாளர்கள் எல்லாக் கடன்களையும் சரிபார்க்கின்றனர். உணவுப் பயிர்க்கடன்களில் 50சதவீதம் சரிபார்க்கப்படுகின்றன.

2. மத்திய வங்கி அலுவலர்கள் அளவிலும் கடன் சரி பார்த்தல் மேற்கொள்ளப்படுகிறது.

3. கடன்கள் சரிவரப்பயன்படுத்தப்பட்டனவா என்பது பற்றி அறிக்கையின் மீது, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்கின்றது.